## கிண்டி மெட்ரோ ரயில் நிலையத்தில்

# இயற்கை முறையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

சென்னை, ஜூன் 9: கிண்டி மெட்ரோ ரயில் நிலையத்தில் இயற்கை முறையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னையில் 45 கி.மீட்டர் தூரத்திற்கு 32 மெட்ரோ ரயில் நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. இங்கு பொதுமக்களின் வசதிக்காக பல்வேறு ஏற்பாடுகளை நிர்வாகம் செயல்படுத்தி வருகிறது. இதேபோல், சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

அதன்படி, கடந்த ஆண்டு ஜூன் 5ம் தேதி உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தில் இயற்கை முறையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்வாகம் அமைத்தது. இது தினசரி 10 கிலோ லிட்டர் கழிவுநீரை சுத்திகரிக்கும் திறன் வாய்ந்தது. இந்த சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக ஓராண்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இதை தொடர்ந்து பசுமை பாதுகாப்பின் மற்றொரு அங்கமாக கிண்டி மெட்ரோ ரயில் நிலையத்தில் 10 கிலோ லிட்டர் திறன்வாய்ந்த மற்றொரு சுத்திகரிப்பு நிலையத்தை நிர்வாகம் தற்போது அமைத்துள்ளது. இதேபோல், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பணியாளர் குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 75 கிலோ லிட்ட திறன் வாய்ந்த கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை தினசரி 150 கிலோ லிட்டர் திறனுக்கு தரம் உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.